Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 02 திங்கட்கிழமை (18 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 324

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
18-10-1993
யாழ்ப்பாணம்

# 4 புக்காரா விமானங்களில் மூன்று பழுதடைந்து விட்டன!

## ஆர்ஜென்ரீனாவில் இருந்து பொறியியலாளர் வருவர்

கொழும்பு, ஒக்ரோபர் 18

ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான — ஆர்ஜென்ரீனா தயாரிப்பான — நான்கு புக்காரா விமானங்களில் மூன்று பழுதடைந்து செயல் இழந்த நிலையில் பலாலி விமான ஓடு தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த விமானங்களை பரிசீலிப்பதற்கு ஆர்ஜென்ரீனாவில் இருந்து பொறியியலாளர்கள் வெகு விரைவில் இலங்கைக்கு வரவுள்ளனர்.

சுமார் 50 கோடி ரூபா செலவில் கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்ட இந்த விமானங்கள் வடபகுதி இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டு வந்தன.

இது குறித்து நேற்றைய "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

அந்தச் செய்தியில் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான கதவை மூடிவிட்டு அரசு படையைப் பலப்படுத்துகிறது

### "விடுதலைப் புலிகள்" இதழில் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 18

பேச்சு வார்த்தைக்கான கதவுகளை நிரந்தரமாக மூடிவிட்டு படைத்துறையின் சரத்தைப் பலப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை சிங்கள அரசு எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழின அழிப்பிற்கு வசதியாக விரிவுபடுத்தப்பட்ட ஒரு படைத்துறை உயர்பீடத்தையும் சிங்கள அரசு அமைத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகையின் பிரதான தலைப்புச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான ஸ்ரீலங்கா அரசின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'வாதுவ' கப்பல் நாளையே பருத்தித்துறைக்கு வரும்

### கோமாரி தொடர்ந்தும் காங்கேசனில்

யாழ்ப்பாணம், ஒக். 18

பருத்தித்துறைக்கு இன்று வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்ட 'வாதுவ' கப்பல் நாளையே பருத்தித்துறைக்கு வந்து சேரும் என செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

காலநிலை சீரின்மையே வாதுவ கப்பல் வருவதில் தாமதம் ஏற்படக் காரணம் என்று கூறப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமையே இக்கப்பல் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டதாகவும் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ். கிங்ஸ்' தியேட்டரில் பொருள்களை களஞ்சியப்படுத்த வசதியாக, அதைத் திருத்த 500 'அஸ்பெஸ்டஸ் சீற்' மற்றும் — கட்டடப் பொருள்கள் —

நவராத்திரிப் பூசைக்காக வர்த்தகத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட அவல், கடலை, சர்க்கரை போன்றவையும் — இக்கப்பலில் எடுத்துவரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காங்கேசன் துறையில் தரித்துநிற்கும் 'கோமாரி' கப்பலில் பொருள்கள் இறக்கும் வேலைகள் மந்தகதியில் நடந்து வருவதாகவும் —

பருத்தித்துறையில் இருந்து அரச ஊழியர்களை திருகோணமலைக்கு அழைத்துச் செல்லும் சேவையும் தாமதமாகி உள்ளதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஒ 8)

## செம்மலையில் கடற்படை அகோர பீரங்கித் தாக்குதல்

மணலாறு மாவட்டத்தில் செம்மலை கிராமம் மீது நேற்று முன்தினம் கடற்படை பீரங்கிப்படகு ஒன்று தாக்குதல் நடத்தியது.

பகல் 12.50 மணியளவில் செம்மலை கடலில் நிலை கொண்டிருந்த அப்படகில் இருந்து மக்கள் குடியிருப்பை நோக்கி அகோர பீரங்கித் தாக்குதல்களும் வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

பின்னர் பிற்பகல் 3 மணியில் இருந்து 4 மணி வரையும் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர். கடற்றொழில் நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

(ஒ-8)

## இ. காங்கிரஸுடன் உறவை புதுப்பிக்க அ.தி.மு.க. முயற்சி!

### தமிழக அரசியலில் காட்சி மாறுகிறது

### ஜெயலலிதா இன்று புதுடில்லி பயணம்

சென்னை, ஒக். 18

கடந்த ஆண்டில் முறிந்து போன அ.தி.மு.க.—காங்கிரஸ் உறவை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதா விரும்புகிறார் என்பதற்கான அறிகுறிகள் தெரிவதாக பி. பி. ஸி. தெரிவித்தது

முதலமைச்சர் ஜெயலலிதா இன்று புதுடில்லி செல்கிறார்.

புதுடில்லியில் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவையும் அங்கு [பிரதமரும் காங்கிரஸ் கட்சித் தலைவருமான நரசிம்மராவை அவர் நாளை சந்தித்துப் பேச இருக்கிறார்.

அந்தச் சந்திப்பின் போது மீண்டும் இரு தரப்பு உறவு அரும்புவதற்கு வாய்ப்பு ஏற்படலாம் என அவதானிகள் கருதுகின்றனர்.

மற்றும் காங்கிரஸ்] தலைவர்களையும் ஜெயலலிதா சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னர்—நாளை மறுதினம் இரவு — அவர் சென்னை திரும்புவார்.

இதற்கிடையில்—

காங்கிரஸுக்கும் அ.தி.மு.கவுக்கும் இடையே உறவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. இரண்டாக பிரியும் சூழ்நிலை!

சென்னை, ஒக். 18

கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதிக்கும் மாநிலங்களவை உறுப்பினர் வை. கோபாலசாமிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விடாயால் தி. மு. க. இரண்டாகப் பிரியும் நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையிலிருந்து பி.பி.ஸி செய்தி மூலவர் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

தி. மு. கவின் 31 மாவட்டச் செயலாளர்களில் ஒன்பது பேர் வை கோபாலசாமிக்கு ஆதரவளிப்பதால் கருணாநிதி பதற்றமடைந்திருக்கிறார். —

தமது மகன் ஸ்டாலினை கட்சிக்குள் முக்கிய இடத்துக்குக் கொண்டு வந்து, கட்சியில் தமது குடும்ப ஆதிக்கத்தை நிலைநிறுத்த கருணாநிதி முயன்று வருகின்றார் என்ற கருத்து தமிழ்நாட்டில் பரவலாக வலுவடைந்து வருகின்றது. —

தி. மு. க. இரண்டாகப் பிரிந்து அதில் ஒரு பிரிவுக்கு கோபாலசாமி தலைவராகும் வாய்ப்பு உண்டு. அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் தற்போது தமிழகத்தில் புலிகளுக்கு எதிராக உள்ள சூழ்நிலை நீங்கும். —

—இப்படி பி பி ஸி. செய்தி மூலவர் தெரிவித்துள்ளார்.

(உ-6)

## இன்றும் நாளையும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 18

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஒ 3)

## கடற்படை ஆட்பலம் அதிகரிப்பு; 6 ஆண்டுகளில் $2\frac{1}{2}$ மடங்கானது

யாழ்ப்பாணம், ஒக். 18

1987 ஆம் ஆண்டு 4 ஆயிரம் தருப்புகளாக இருந்த ஸ்ரீலங்கா கடற்படையின் ஆட்பலம் இவ்வாண்டு 10 ஆயிரத்து 400 ஆக உயர்ந்துள்ளது.

ஆறு ஆண்டு காலத்தில் கடற்படை ஆட்பலம் இரண்டரை மடங்கிற்கும் அதிகமாக (260 சத வீதம்) அதிகரித்திருக்கிறது

"விடுதலைப் புலிகள்" இதழில் வெளியான புள்ளி விவரங்களில் இருந்து இத்தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

அதிவேகப் படகுகள், பீரங்கிப் படகுகள், பயணிகள் துருப்புக் காவிக் கப்பல்கள் என கடற்படையின் ஆயுத தளபாட வசதிகளும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா கடற்படையிடம் தற்போதுள்ள கலங்களின் விவரம் வருமாறு:-

★ கட்டளை மற்றும் துணைக் கப்பல்கள் —

★ ... ரோந்துப் படகு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதிக்குப் பொருள்கள்:

# ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி தாண்டிக்குளத்தில் உதாசீனம்

யாழ்ப்பாணம், ஒக். 18
பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கிய பொருள்களை வடபகுதிக்குள் எடுத்துவர தாண்டிக்குளம் தடைமுகாமில் உள்ள படையினர் அனுமதி மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் காகிதாதிகள், மோட்டார்சைக்கிள் டயர், டியூப் மற்றும் நான்கு பற்றறிகள் ஆகியவற்றை யாழ்ப்பாணம் எடுத்துவர பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அனுமதி பெற்று அச்சீட்டில் வவுனியா பொறுப்பதிகாரியின் மேல் ஒப்பத்தையும் பெற்றிருந்தார்.

ஆனால் தாண்டிக்குளம் தடைமுகாம் இராணுவத்தினர் 4 பற்றறிகளுக்கு அனுமதி வழங்கியது யார் என்றும் அனுமதிச்சீட்டு உண்மையானதா அல்லது போலியானதா என்றும் கேள்விக் கணைகளால் அவரைத் துளைத்து எடுத்ததுடன் எல்லாப் பொருள்களையும் கொண்டுவர அனுமதி மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோல, பல சம்பவங்கள் தாண்டிக்குளத்தில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-175)

## இன்று

அராலி மேற்கு முத்தமிழ் சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று இடம்பெறும். (த-161)

o o o

சரணாகி அறிவாலயம் சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணிக்கு கோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி போடப்படும். (த-8)

# பாகிஸ்தான் பிரதமராக பெனாஸிர் வருவது உறுதி

## நவாஸ் ஷெரீப் பின்வாங்குகிறார்

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் சபாநாயகராக பெனாஸிர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் வெற்றியீட்டியதை அடுத்து —

பாகிஸ்தான் புதிய பிரதமராக பெனாஸிர் பூட்டோ தெரிவு செய்யப்படுவது உறுதியாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற சபாநாயகர் தேர்வின் போது பெனாஸிரின் கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளருக்கு 106 வாக்குகளும் —

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட — நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) பிரிவு — வேட்பாளருக்கு 96 வாக்குகளும் கிடைத்தன.

இதற்கிடையில் —

நாளை நடைபெறும் பிரதமர் தெரிவுக்கான தேர்தலில் முஸ்லிம்லீக் (நவாஸ்) பிரிவின் வேட்பாளராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் போட்டியிடமாட்டார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பெனாஸிர் பூட்டோவை எதிர்த்து நவாஸ் ஷெரீபின் கட்சியின் சார்பில் முன்னாள் பிரதமர் குலாம் முஸ்தபா ஜதோயி போட்டியிடுவார் என முஸ்லிம் லீக் (நவாஸ்) பிரிவு தலைமைப் பீடம் அறிவித்துள்ளது. (உ-த-எ)

## அடுத்த மாதம் புதுடில்லியில் தேர்தல்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள புதுடில்லி யூனியன் பிரதேச சட்டசபைக்கான முதலாவது தேர்தல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

70 உறுப்பினர்களைக் கொண்டுள்ள இச் சட்டசபைக்கான தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா ஆகியன சார்பில் தலா 70 பேரும் —

ஜனதாதளக் கட்சி சார்பில் 69 பேரும் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் 55 லட்சம் பேர் வாக்களிக்கும் தகைமை பெற்றுள்ளனர் (உ-ஈ)

## தேர்வாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18
வடமராட்சிக் கோட்டத்திலும், ஏனைய கோட்டங்களிலும் தமிழ்மொழி பொதுக் கல்வித் தேர்வு விடைத்தாள் மதிப்பீடு செய்த முதுநிலை மதிப்பீட்டுத்தேர்வாளர்களை நாளை செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு தத்தமது மதிப்பீட்டு நிலையங்களுக்கு சமுகம் தருமாறு தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். (ஓ)

## பாதிப்புற்ற மாணவரின் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 18
1993 ஏப்ரலில் நடைபெற்ற ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றி, அண்மையில் வெளியான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள், உயர்தரப் பாடசாலைகளின் அதிபர்கள், மாணவ முதல்வர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரை இக்கூட்டத்தில் பங்குபற்றும் படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

## உலர் உணவு

தென்மராட்சி, ஒக். 18
கெற்பலி பண்டிதர்குடியிருப்பிலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் இப்பகுதிக்கு வந்துள்ள சுமார் 500 குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றனர். (த-117)

கமநல சேவை திணைக்களத்தில்

# 14 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை!

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தில் பதினான்கு வெற்றிடங்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நிரப்பப்படாமல் உள்ளன. பெரும்பாக உத்தியோகத்தர்கள், காவல் தொழிலாளிகள், தட்டெழுத்தாளர்கள் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்களே நிரப்பப்படாமல் உள்ளன.

குறிப்பாக இத்திணைக்களத்தின் கீழ் உள்ள 12 கமநல சேவை நிலையங்களிலும் இருக்க வேண்டிய 12 பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கு பதிலாக 7 பெரும்பாக உத்தியோகத்தர்களே தற்போது கடமையில் உள்ளனர்.

இதனால் ஒரு பெரும்பாக உத்தியோகத்தர் ஒன்றுக்கு மேற்பட்ட கமநல சேவைகள் நிலையங்களை மேற்பார்வை செய்ய வேண்டியிருப்பதால் விவசாயிகளை சந்தித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது தொடர்பாக கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் உள்ள கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளருக்கு தெரியப்படுத்தப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. (த-162)

# மாநகரசபை நடத்தும் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 18
யாழ் மாநகரசபை பிரதம நூலகத்திற்கு 1992 இற்கு பின் கிடைக்கப் பெற்ற நூல்கள் அடங்கிய புத்தகக் கண்காட்சி ஒன்று யாழ் மாநகரசபை பிரதம நூலகத்தில் நடைபெற உள்ளது. தற்போது மாநகரசபையின் பிரதம நூலகத்துக்கு வந்து சேர்ந்துள்ள புதிய நூல்கள் தொடர்பாக மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளவும், வாசிக்கும் பழக்கத்தை வாசகர் மத்தியில் தூண்டும் நோக்குடனுமே இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்காட்சி ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை வரை நடைபெறும். யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளையினால் அன்றைய தினம் காலை 9 மணிக்கு கண்காட்சி திறந்து வைக்கப்படும். மாலை 5 மணி வரை பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிடலாம். (த-162)

# கரட், லீக்ஸ் நல்ல விளைச்சல்

யாழ் குடாநாட்டில் பயிரிடப்பட்ட கரட், லீக்ஸ் போன்ற மரக்கறி வகைகள் இம்முறையும் நல்ல விளைச்சலைத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குளிர் பிரதேசங்களிலேயே பயிராகும் இந்த இனங்களை இங்கு கோடைகாலத்தில் பயிரிட்டு விவசாயிகள் வெற்றி கண்டுள்ளனர்.

உரும்பராய், திருநெல்வேலி, கோப்பாய் போன்ற பகுதிகளில் லீக்ஸ், கரட் பயிரிடப்பட்டு தற்போது அறுவடை செய்யப்படுகின்றது.

இம்மரக்கறி விதைகளை யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் கொழும்பில் இருந்து தருவித்து விவசாயிகளுக்கு விநியோகித்திருந்தது. (த-17)

வெளிநாட்டு நிறுவனங்கள்

# குடாநாட்டு அமைப்புகளுக்கு நிதி வழங்க பின்னடிப்பு

யாழ். மாவட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவிகளை வழங்க வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் பின்னடிப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களின் நிதி உதவியுடனேயே பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.

மேற்படி திட்டங்களை நேரடியாகப் பார்வையிடக் கூடிய சூழ்நிலை இங்கு இல்லை என்று அரசு கூறியுள்ளதை அடுத்து அத்திட்டங்களுக்கு உதவி வழங்கிவந்த நிறுவனங்கள் தற்சமயம் நிதி வழங்க பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உள்ளூர் தொண்டு நிறுவனங்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் கவலை தெரிவித்தன. (ஒ-3)

'யாழ்தேவி' விமர்சனங்கள்:

# பத்திரிகைகளை சாடுகிறார் இராணுவத் தளபதி சிசில்

கொழும்பு, ஒக். 18
யாழ்தேவி ராணுவ நடவடிக்கையை விமர்சித்துக் கட்டுரைகள் வெளியிட்ட பத்திரிகைகளை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா கடுமையாகச் சாடியுள்ளார்.

"வீட்டினுள் இருந்து கொண்டு எழுதும் விமர்சகர்களுக்கு இராணுவத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்றால், இவர்களுக்கு எல்லாம் நான் விளக்கம் கூறிக் கொண்டிருக்க முடியாது" என்றும் இராணுவத் தளபதி காரசாரமாகக் கூறியுள்ளார். (ஓ-எ)

# வான் தாக்குதலை எதிர்க்க தமிழர் திறன்பெற வேண்டும்

## சங்கர் ராஜி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 18
இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையையே ஒரே தீர்வாக கொழும்பு அரசு உறுதியுடன் நம்புவதைத் தொடர்ந்து—

இலங்கை விமானப் படையின் கண்மூடித்தனமான வான் தாக்குதலை தமிழ் மக்கள் எதிர்கொள்ள அவர்கள் எதிர்த் தாக்குதல் திறமையைப் பெறவேண்டும் என்று ஈரோஸ் அமைப்பின் தலைவர் சங்கர் ராஜி தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை, அரசுப்படைகளின் விமானத் தாக்குதலுக்குச் சமமான ஒரு திறனை தமிழர்கள் பெற வேண்டும் என்பது கட்டாயத் தேவை என்றும் அவர் கூறினார்.

வான் எதிர்த் தாக்குதல் திறன் என்பது விமான எதிர்ப்பு ஏவுகணைத் தொழில்நுட்பம் என அர்த்தம் கொள்ளப்படுகிறது என்றும் அவர் கூறினார். (ஓ-எ)

விஸா பெற்று ஜேர்மன் புறப்பட

# கட்டுநாயக்காவுக்குச் சென்ற 2 தமிழ் இளைஞர் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 18
ஜேர்மனி செல்வதற்காக உரிய முறையில் விஸா பெற்று ஏனைய ஆவணங்களுடன் சென்ற இரு தமிழ் இளைஞர்கள் அண்மையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கா அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

விஸா பரிசோதனைகளை முடித்துக் கொண்டு, பொதி சோதனையிடும் பகுதியில் நின்று கொண்டிருந்த பிரஸ்தாப இளைஞர்களின் கடவுச் சீட்டுகள் விமான நிலைய சிங்களப் பணிப்பெண் ஒருவரால் திட்டமிட்டு பறித்துச் செல்லப்பட்டன என்றும் —

பின்னர் அந்த கடவுச் சீட்டுக்கள் கிழிந்திருந்தன எனக் கூறி அதிகாரிகளால் இளைஞர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் —

அதைத் தொடர்ந்து அவர்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## கொழும்பில் யாழ். வாசி தேடப்படுகிறார்

கொழும்பு, முகத்துவாரம் பகுதியில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட — தற்கொலைத் தாக்குதல் நபர் அணியும் குண்டுடன் கூடிய உள்ளங்கி தொடர்பாக —

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் முத்துக்குமாரு மகேந்திரன் என்பவரை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தேடி வருகின்றனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஈ)

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு வகுப்புகள்

★ 6வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும், மகளிருக்கும் மட்டும்.

ஆரம்பம்: 24 - 10 - 1993
மாலை 3 - 00 மணி
(விஜயதசமி அன்று)

கலாலயா
(தொழிற் பயிற்சியகம்)
விக்டோரியா வீதி, யாழ்நகர்,
(வி/6247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண பல்கலைக்கழக கல்லூரி

# மாணவரின் கோரிக்கைகளுக்கு மானிய ஆணைக்குழு இணங்கியது

யாழ்ப்பாணம், ஒக். 18

வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகளுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இயங்கும் இக்கல்லூரிக்கு நிரந்தரமாக பணிப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் —

இக்கல்லூரியில் கடமையாற்றும் உதவி பதிவாளரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் — கோரி மாணவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மாணவர்களின் கோரிக்கையை அடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, புதிய பணிப்பாளரை நியமிக்க விண்ணப்பங்கள் கோரியுள்ளதாகவும் —

உதவிப் பதிவாளரை யாழ் பல்கலைக்கழகத்துக்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

கடந்த செப்டம்பர் முதல் இக்கல்லூரி மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-8)

## கண் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, ஒக். 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பகுதியில் உள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான கண் சிகிச்சை முகாமினை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தவுள்ளனர்.

கண்பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் கண்ணாடி வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-117)

## மருந்து வகைகள் தட்டுப்பாடு

வடமராட்சி, ஒக். 18

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சலரோக நோயாளர்களுக்குரிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர்கள் பெரிதும் அசௌகரியமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி மருந்தான இன்சுலின் உட்பட அனைத்து மருந்துக் குளிசைகளும் முடிவடைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-173)

## வவுனியாவில் படையினர் கெடுபிடி!

யாழ்ப்பாணம், ஒக். 18

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இராணுவக் கெடுபிடிகள் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் சுற்றிவளைப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் அங்கு அதிகரித்துள்ளன.

வேப்பங்குளம் கழாமி குளத்தில் கடந்த வியாழனன்று, தமிழ் இளைஞர் யுவதிகள் கைது செய்யப்பட்டு தாண்டிக்குளம் இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிர சோதனை மற்றும் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். (உ-5)

---

வடமராட்சியில்

G. A. Q. – 94

யாழ் பல்கலைக் கழகம்

B A – Part - I
B A. – Final
1st. in Com.
B. Com.

கணக்கியல் — பவான்
வர்த்தகம் — பசில்
ஏனைய பாடங்களும்

ஆரம்பம்:

22 - 10 - 1993

**சயன்ஸ் அக்கடமி**

நெல்லியடி.

(27667)

---

## மண் அரிப்பைத் தடுக்க கைதடியில் அணைக்கட்டு

அரியாலை, ஒக். 18

கைதடி வடக்கு மற்றும் மேற்குக் கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள நிலப்பரப்புகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்கு பெரிய அளவிலான அணைக்கட்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பயிர் நிலங்களில் கடல் நீர் கலப்பதைத் தடுக்கவும், மழை காலங்களில் நன்னீர் கடலுக்குச் செல்வதைத் தடுக்கவும் இது உதவும்.

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலரின் முயற்சியினால் இந்த அணைக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. (த-17)

## குடிதண்ணீர் விநியோகம்

அரியாலை, ஒக். 18

குருநகர் பகுதிக்கு யாழ். மாநகராட்சி மன்றத்தினால் முழுமையாகக் குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது;

குருநகர் லூர்தம்மாள் ஆலயத்தின் நன்னீர் கிணற்றில் இருந்து இப்பகுதிக்குக் குடி தண்ணீர் வழங்கப்படுவதாக யாழ். மாநகரசபைப் பொறியியலாளர் திரு. துரைராஜா தெரிவித்தார்.

இதனைவிட 5 நன்னீர் குழாய்க் கிணறுகளும் இப்பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதால் குருநகர்ப் பகுதி மக்களின் குடி தண்ணீர் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்புத்துறை, பாசையூர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய பகுதிகளுக்கும் குடி தண்ணீரை முழுமையாக வழங்க யாழ் மாநகராட்சி மன்ற குடி தண்ணீர் வழங்கும் பகுதியினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (த-17)

---

அரசினர் பொது (போதனா) வைத்தியசாலை
யாழ்ப்பாணம்

## கேள்வி விளம்பரம் சலவை ஒப்பந்தம் - 1994

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையின் அழுக்குத் துணிகளை 01 - 01 - 1994 தொடக்கம் 31 - 12 - 1994 வரை சலவை செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் 29 - 10 - 1993 காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விக்கு உரிய பத்திரங்களின் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். எனது பெயருக்கு ரூபா 150/ ஐ வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் நேரில் ஒப்படைக்கப்படும் போது ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டு வழங்கப்படும். ஒப்பந்தக்காரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம்.

கேள்விப்பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடின் நிராகரிக்கப்படும். முடிவுத் திகதியன்று காலை 10 00மணிக்குப் பின்வரும் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1,500/- செலுத்தி ஒப்பந்தகாரர் கைச்சாத்திடல் வேண்டும். ஏற்றுக் கொள்ளப்படாத கேள்விப்பத்திரங்களின் மேல் செலுத்தப்பட்ட பணம் ஒப்பந்தம் கைச்சாத்தானதும் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 29 - 10 - 1993 காலை 10 மணிக்கு எனது காரியாலயத்தில் திறக்கப்படும் போது கேள்விதாரர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதியோ பிரசன்னமாயிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களை இவ் வைத்தியசாலையின் கணக்காளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.


வைத்திய கலாநிதி
(செல்வி) ந கனகரத்தினம்,
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
1993 - 10 - 15

(ஸி-6243)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கண்ணில்: 08 – 06 – 1922

காற்றில்: 18 – 09 – 1993

அமரர்

**கணபதிப்பிள்ளை பரராஜசேகரன்**

எல்லோர்க்கும் நல்லனாய்
எவர்க்கும் இனியனாய்
வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து
எமையெல்லாம் வாழவைத்த
தலைவா உம் நினைவால்
சூட்டுகிறோம் கண்ணீர் மாலை

என்றும் உம் நினைவால் வாடும்:
மனைவி, மகன், மருமகள்,
உறவினர்கள்.

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(27666)

---

## 34ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி சின்னையா சின்னம்மா**

தோற்றம்: 18 – 11 – 1923
மறைவு: 15 – 09 – 1993

இன்று 18 - 10 - 1993 நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்.


— குடும்பத்தினர்.

சவி கார்மென்ட்,
மருதனார்மடம்.

(6540)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 03 – 05 – 1919

இறப்பு: 22 – 10 – 1990

பிரம்மஸ்ரீ

**சி. நாராயண சாஸ்திரிகள்**

திதி - சதுர்த்தி

நாராயண சாஸ்திரிகள் என்னும் நாம
நூலோனும் வைபதத்தின் பேறு பெற்றே
மூன்றாண்டு நினைவான அஞ்சலியை உளமாரச்
செலுத்தி யன்னார் ஆத்ம சாந்தி
பாராயணம் செய்த பரமன் பாதம்
பக்குவமாய் முத்தி நிலை அருளவேண்டி
ஆராவமுதனைய அன்னல் பதம் வரை
அஞ்சலியாம் மலர்களினால் அர்ச்சிப் போமே.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(27702)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 8ஸ்ரீ மோறிஸ் Oxford கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: டாக்டர் ஸ்ரீஜெயதேவி, 179, நாவலர் வீதி, (மனோகரா சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (27694)

நிசான் சொறி டிப்பரன்ட் ஷெல், தட்டு, முன்னச்சு, முன் கண்ணாடியும், டிப்பரண்ட்ஷெல் மொடல் ஆம்டோவும் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு S ராஜா, இல. 9/1, மூளாய் வீதி, சண்டிக்குளி. (27699)

10", 8" நீளமான இரண்டு தனி முறிரை கண்ணாடி அலுமாரி, 5 அந்தர் அவெளிதராக புதுமொடல், மேசைதராக விற்பனைக்குண்டு. சி. பரமசாமி, வெற்றிலை வியாபாரம், மார்கட் வெளியடை, யாழ்ப்பாணம். (6542)

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஒரு சரப்புக்குள் காணி விற்பனைக்கு அல்லது ஒத்திக்கு தேவை. எழுதத் தொடர்பு: இல. 566, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27698)

நற்குணமும், பணிவுமுள்ள பெண் பிள்ளை வீட்டில் பணியாற்றுவதற்கு தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி இல: 565, C/o உதயன், யாழ்ப்பாணம். (சி/6541)

### மிருதங்கம்

அனைத்து தோல் வாத்தியங்களும் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் பல தரப்பட்ட மிருதங்கங்களும் சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. இந்திரன் மிருதங்க தொழிலகம், புதிய பல் நிலைய மேல் மாடி, யாழ்ப்பாணம். (27677)

### SPECIAL ENGLISH

G. C. E (O/L) Paper Classes, Spoken English G. A. Q. (E. S. L.) ஆகிய விசேட ஆங்கில வகுப்புக்களின் புதிய பிரிவுகள் எதிர்வரும் 18-10-1993 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. இ. சிவலிங்கம், புதிய ஆங்கில கல்வி நிலையம், ஆரியகுளம், யாழ்ப்பாணம். (இ-6417)

### திருத்தவேலைகளுக்கு

உங்கள் சுடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிக்கா றேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (இ-6176)

### இலவச திருமண சேவை

37 வயது, சித்திரை 8, செவ்வாய் 4, பாவம் 72 ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். அ. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27664)

### காவேரி சீயாக்காய்ப் பவுடர்

கூந்தலை அடர்த்தியாகவும், சுத்தியாகவும், கருமையாகவும் வைத்திருக்கும். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். தயாரிப்பாளர்: கந்தசாமி அன் சன்ஸ், 15, ஆடியபாதம் வீதி, நல்லூர். (27663)

### தவறிவிட்டது

18-10-93இல் சுதுமலையில் தவறவிட்ட சொப்பிங் பாக், பார்சலை எடுத்தவர்கள் பாக், குடும்ப அட்டை, அடையாள அட்டைகளை தயவுசெய்து கருணை கூர்ந்து அம்மன் கோவிலில் ஒப்படைக்கவும். "கணபதி" மானிப்பாய். (6695)

எனது அடையாள அட்டை, பேர்ஸ், சிறுதொகைப்பணம், மைழக்கோட், தொப்பி என்பன அடங்கிய பச்சை நிற வயர் பாக் 16-10 93 இரவு தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். செ. சிவப்பிரகாசம், சித்திர ஆசிரியர், இல. 111, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (27700)

### வர்த்தகமும் கணக்கியலும்

வர்த்தகமும் கணக்கியலும் G. C. E. O/L வகுப்புக்கான 1986 தொடக்கம் 1992 வரை 7 வருட கடந்த கால வினா-விடை உள்ளடக்கியது. ஆக்கம்: இ. செல்வநாயகம். கணக்கியல் ரூபா 45/- வர்த்தகம் ரூபா 60/- தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (இ-6197)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## O/L PAPER CLASS

மாலை நேர வகுப்பு

(இறுதிப் பிரிவு)

திங்கள், வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம் — 3 p.m. — 6 p.m.

ஆரம்பம்: 18 - 10 - 1993

முக்கிய குறிப்பு:

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினரால் போதிக்கப்படுகின்றது.

★ குறிப்பிட்ட தொகையினரே அனுமதிக்கப்படுவர். எனவே அனுமதியை முன்னதாகவே பெற்றுக் கொள்ளவும்.

(சி-6419)



## புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

Introduction to Computer and BASIC Language

ஆரம்பம்: 23 - 10 - 1993
25 - 10 - 1993

★ வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும்

★ காலை, மாலை வகுப்புக்கள்

விவரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14 st. Peter's Lane, Hospital Road, Jaffna.

(சி-6415)



## G. A. Q. 95

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான வெளிவாரிப் பட்டப் படிப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

★ A/L இல் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் நேர் கூறப்பட்ட பாட நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு: S. அருள்நங்கை,

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-6409)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 07 – 08 – 1973

உதிர்வு: 18 – 09 – 1993

### செல்வி சசிகலா கந்தசாமி

(ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவி)

"திங்கள் ஒன்று கழிந்ததம்மா
எங்கள் நெஞ்சம் புலம்புதம்மா
என்னத் தேரினில் உலாவரும் வேளையில் - எம்மை
கண்ணீரில் ஆழ்த்திவிட்டு காலனுடன் சென்றதேன்"

நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
பெற்றோர், சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார்.

பொ. கந்தசாமி - புஸ்பவதி,
54/5, குறொசெற் லேன்,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(27701)

## 31ஆம் நாள் ஆத்மசாந்தி அஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்: 07 – 11 – 1914

மறைவு: 19 – 09 – 1993

### திருமதி மீனாட்சி குலசிங்கம்

(அமரர் திரு. நமசிவாயம் குலசிங்கம் ஆசிரியர் அவர்களின் அன்பு மனைவி, அமரர் திரு. குலசிங்கம் கந்தையா ஆசிரியர் அவர்களின் அருமைத் தாயார்)


நாளை (19 - 10 - 93) செவ்வாய்க்கிழமை நண்பகல் வதிரி உச்சிலமனொல்லை அம்பாள் ஆலயத்திற்கு அருகில் உள்ள அவரது வதிவிடத்தில் நடைபெறும் சபிண்டீக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மருமகள்: தையல்நாயகி கந்தையா,
பேர்த்தி: நந்தினா கந்தையா,
[illegible]

வதிரி.
கரவெட்டி.

(27676)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியைகளும்



தோற்றம்: 30 – 07 – 1915

மறைவு: 18 – 09 – 1993

அமரர்

### வேலுப்பிள்ளை சண்முகநாதன்

செல்லும் சிறீமுகசேர் சொற்கன்னி பூர்வபக்கம்
நல்ல திருதியையாம் நன்னாளே - தெல்லி
சதுமலை வேற்பிள்ளை சுதன் சண்முகநாதன் நற்
பதியுடன் சேர்ந்த நன்னாள்

மூளாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சண்முகநாதனின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியைகளும் இன்று திங்கட்கிழமை (18-10-93) பரஞ்சோதி விநாயகசுந்தரம் இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

க. ஞானசம்பந்தர்.

மூளாய்,
மானிப்பாய்.

(27674)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சொல்லுக்கு முந்திய செயல்!

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குரிய நிர்வாக அதிகார அமைப்பை, இரு கூறுகளாகப் பிரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. வடக்குக்குரிய செயற்பாடுகளைக் கவனிக்க ஒரு குழுவும், கிழக்குக்குரிய செயற்பாடுகளைக் கவனிக்க இன்னொரு குழுவும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ளனவாம்.

இவ்வாறு நிர்வாக அமைப்பை இரு கூறுகளாக்கும் நடவடிக்கையின் முன்னோடியாக, கிழக்கு புனரமைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்குச் சம்பந்தமான விடயங்களில், தமிழர் தொடர்புடைய விவகாரங்களில், அவர்களின் முதன்மைப் பிரச்சினையாக விளங்கும் இனப்பிரச்சினையில், ஸ்ரீலங்கா அரசும், அதன் தலைவர்களும் எப்போதும் சொல் ஒன்றும் செயல் வேறாகவுமே நடந்து வருகிறார்கள். தெளிவான, வெளிப்படையான, நேர்மையான போக்கை என்றுமே கடைப்பிடித்ததில்லை.

ஆனால் இப்போது, வழமைக்கு மாறாக, இணைந்திருக்கும் வடக்கு - கிழக்கை, தமிழர் தாயகத்தைப் பிரித்து விடுவதில் சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பதை அவதானிக்க முடிகிறது!

தமிழர் தாயகத்தைப் பிரித்துவிடுவதே அரசு இனப்பிரச்சினைக்கென்றுத் தன்வசம் வைத்திருக்கும் தீர்வு. ஆம். தமிழர் தாயகத்தை வடக்கு - கிழக்கை இரண்டு கூறுகளாக்கிப் பிரித்து விட வேண்டும் என்பதே தென்னிலங்கை அரசியல் வாதிகள் அனைவரினதும் அரசியல் தீர்வு, ஏகோபித்த தீர்வு.

அதனாலேயே அது —

இரண்டு வருடங்களாகப் பெரிதும் முயன்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப் பிரச்சினைக்குக் கண்டுபிடித்த அரசியல் தீர்வு வடக்கையும், கிழக்கையும் தனியாகப் பிரித்து விட வேண்டும் என்பதே. இந்த வாரத்தில் அந்தத் "தீர்வு" உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிடுவதென்ற சொல் [பேச்சு] உத்தியோகபூர்வமாக பதிவுசெய்யப்படுவதற்கு முன்னதாகவே, செயல் தொடங்கி விட்டது. அதுவே இணைந்திருக்கும் மாகாண சபையின் நிர்வாக அமைப்பை இரு கூறுகளாக்கும் செயல்!

சொல்லொன்று செயல் வேறு என்ற நிலைமை மாற்றி, சொல்லும் செயலும் ஒன்றே என்று காட்டுகிறார்கள். சொல்லுக்கு முன் செயல் என்று ஒருபடி மேலேயும் போகிறார்கள். முதலில் செய்து பிறகு சொல்வது என்ற புதிய நிலைப்பாட்டை தமிழர் தாயகத்தைப் பிரிப்பதில் மட்டுமே உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்தை அங்கீகரித்தால் அது நாட்டைப் பிரிப்பதாகிவிடும் என்று ஓலமிடுபவர்கள் சிங்களத் தலைவர்கள், தமிழர் தாயகத்தைப் பிரிப்பதில் அவர்கள் எவ்வளவு அக்கறையாக உள்ளார்கள் என்பதை சொல்லுக்கு முந்திய செயல் காட்டுகிறது. தமிழும் உத்தியோக மொழி என்ற எழுத்தைச் செயலாக்கப் பின்நிற்கும் அரசு தமிழர் தாயகத்தைப் பிரித்து விடுவதில் சொல்லுக்கு முன் செயல் என்ற வேகத்தோடு பணியாற்றுகிறது.

இத்தகைய சிங்களவர்கள், தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பது அவலை நினைத்து உரலை இடிக்கும் விந்தையே!

---

கொழும்பு நகரப் பகுதிகளில்

# அடிக்கடி நடக்கும் தேடுதலால்

# தமிழ் மக்களின் உணர்வு பாதிப்பு

## தாம் ஒதுக்கப்படுவதாக அவர்கள் இலேசம்

கொழும்பு, ஒக். 18

கொழும்பில் தமிழ் மக்கள் மத்தியில் படையினர் நடத்தும் தேடுதல் நடவடிக்கை தாம் ஒதுக்கப்பட்டுள்ளதான ஓர் உணர்வையே அம்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பில் இருந்து பி. பி. ஸி செய்தியாளர் ஜோர்ஜ் அனுப்பிய கண்ணோட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

சில தமிழர்கள் படையினரால் இம்சிக்கப்பட்டுள்ளனர். பொலீஸார் தம்மை மிரட்டிப் பணம் பறிப்பதாகவும் சில தமிழர்கள் முறையிட்டுள்ளனர்.

படையினரைப் பொறுத்த வரை நாட்டின் தலைவர்களையும், இராணுவத் தலைவர்களையும் அவர்கள் பாதுகாக்க வேண்டியிருக்கின்றது. கடந்த காலத்தில் பல இராணுவ மற்றும் அரசியல் தலைவர்கள் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்போது பிரச்சினை என்ன என்றால் தெற்கில் லட்சக்கணக்கான சிங்களவர்களுடன் தமிழர்கள் சமாதானமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு இடையே தமிழ்ப் போராளிகளைக் கண்டு பிடிப்பது சுலபமான விஷயம் அல்ல.

- இப்படி பி. பி. ஸி. கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## நவராத்திரி விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ் மாநகர சபை ஊழியர்களின் ஆதரவில் சபை வளவில் அமைந்துள்ள ஆதிவைரவர் ஆலயத்தில் நவராத்திரி விழாவையொட்டி பூசைகள் தினமும் நடந்து வருகின்றன.

இன்றைய பூசை நண்பகல் நடைபெறும் போது, வாகீச கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரனின் சமயச் சொற்பொழிவு சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறும்.

மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (அ)

o o o

யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நவராத்திரி விழா பிற்பகல் 4 மணிமுதல் 5 மணி வரை நடைபெறுகிறது.

விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து இராமநாதன் நுண்கலைப் பிரிவினர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. (அ-161)

## ஹெலியை கண்டு தவறி வீழ்ந்தார்

தென்மராட்சி, ஒக். 18

ஹெலிகொப்டரை கண்டு மரத்திலிருந்து இறங்க முயன்றவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் கடந்த புதன்கிழமை கொடிகாமம் கச்சாய் வடக்கில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சுப்பிரமணியம் (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார். (த-117)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு

## 'வழிகாட்டல்' அதிகாரியை நியமிப்பதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். பல்கலைக்கழகத்தில் "எதிர்கால வழிகாட்டல் அதிகாரி" ஒருவரை நியமிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வெளியேறுவோர் வேலை பெறுவதில் உள்ள தடைகளை நீக்கவும் —

பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில்களை பெற வழிகாட்டவும் —

இந்த அதிகாரி உதவுவார்.

வைத்தியபீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் வேலைவாய்ப்பு பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவது தெரிந்ததே.

## ஆஸ்பத்திரி வளவில் திரியும் கட்டாக்காலி நாய்கள்

யாழ் ஆஸ்பத்திரி வளவினுள் கட்டாக்காலி நாய்கள் சர்வசாதாரணமாக திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அங்கு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால், சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் ஆபத்து நிலைமை ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் புகார் கூறுகின்றனர்.

25க்கும் மேற்பட்ட நாய்கள் அங்கு நிரந்தரமாக தங்கியுள்ளன.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா என்று நோயாளர்கள் வினவுகின்றனர்.

## விதை உருளைக்கிழங்கு விரைவில் கப்பலில் வரும்

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென 150 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு இம்மாத இறுதிக்குள் கப்பலில் வந்து சேரும் என யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த சிவலோகநாதன் தெரிவித்தார்

கப்பலில் இந்த விதை உருளைக்கிழங்கு எடுத்து வருவதற்கு விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளார்.

உருளைக்கிழங்கு செய்கை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-17)

இராணுவம் நுழைய முயன்றால்

## பள்ளிவாசல் தகர்க்கப்படும் தீவிரவாதிகள் எச்சரிக்கை

புதுடில்லி, ஒக். 18

காஷ்மீரில் சுற்றிவளைக்கப்பட்டுள்ள பள்ளிவாசலுக்குள் இராணுவம் நுழைய முற்பட்டால் பள்ளிவாசலை குண்டு வைத்து தகர்க்கப்போவதாக பள்ளிவாசலுக்குள் உள்ள முஸ்லிம் தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

பள்ளிவாசலுக்குள் 60 தீவிரவாதிகள் உள்ளனர் என்றும் தீவிரவாதிகளின் கோரிக்கை குறித்து அரச அதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

தமக்கு எதிரான கட்சியின்

## விசாரணையைத் துரிதமாக்க கோருகிறார் பொன்சேகா

உபசபாநாயகரும் மாத்தறை மாவட்ட எம்பியுமான காமினி பொன்சேகா தம்மீதான ஒழுங்காற்று விசாரணையை துரிதமாக நடத்தி முடிக்கும்படி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பி. ஒருவர் கொண்டு வந்த தனிநபர் பிரேரணை மீதான வாக்களிப்பில் அப்பிரேரணைக்கு எதிராக அரச எம், பிக்களுடன் சேர்ந்து வாக்களித்ததால், இவர் நடுநிலை வகித்த சம்பவம் தொடர்பாக இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐ. தே. க. தீர்மானித்துள்ளது தெரிந்ததே. (உ-எ)

## மாத இறுதியில் குமணை

யாழ்ப்பாணம், ஒக். 18

தற்சமயம் கொழும்பு துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றிக் கொண்டு நிற்கும் 'குமண' கப்பல் மாத இறுதிக்குள் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். செயலகத்துக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் —

தொண்டர் நிறுவனங்களுக்கு ஒரு தொகுதி பொருள்களையும் — ஏற்றிக் கொண்டு வரும் எனத் தெரிவிக்கப்பட்டது

இம்முறையுடன் இக்கப்பலின் சேவை நிறுத்தப்படும் என்றும் —

மீண்டும் அடுத்த வருடம் ஜனவரி நடுப்பகுதியிலே இக் கப்பல் சேவையில் ஈடுபடும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## இடம் பெயர்ந்தோர்களின் முகாம்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

மாரிகாலம் ஆரம்பிப்பதைக் கருத்திற் கொண்டு இடம் பெயர்ந்தோர் முகாம்கள் பல அரசசார்பற்ற நிறுவனங்களினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சங்கானை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பகுதிகளில் கோருட் நிறுவனமும் - ஜேர்மன் ஜனநாயக குடியரசின் உதவித்திட்டத்தின் கீழ் செயற்படும் ஏனைய நிறுவனங்களும் புதிய குடிசைகள், கழிவறைகளை உள்ளூர் வளங்களைக் கொண்டு அமைத்துவருகின்றன. (உ-162)

## இராணுவ நடவடிக்கை திருமலையில் தொடர்கிறது

கொழும்பு, ஒக். 18

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து இடம் பெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

தற்பொழுது யான் ஓயாவின் தெற்குப் பகுதியிலும் படை நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு குறிப்பிட்ட பகுதிகளில் இரு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

சேத விபரங்கள் தெரியவரவில்லை. (ஓ-எ)

## லண்டனில் வீதிக் கலவரம் அறுபது பேர் வரை காயம்

லண்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதிக் கலவரங்களில் ஆகக் குறைந்தது அறுபது பேர் காயமடைந்தனர்.

பிரிட்டனில் கடந்த மூன்று ஆண்டுகளில் இடம் பெற்ற மிக மோசமான கலவரம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இனவாதத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் தேசிய] கட்சியின் தலைமையகத்தைத் தாக்க முயன்ற போதே கலவரம் வெடித்ததாக பொலீஸார் குறிப்பிட்டனர்.

வலது சாரி கட்சியான பிரிட்டிஷ் தேசிய கட்சி, தேர்தல் நன்மைகளைப் பெறுவதற்காக சிறுபான்மைக் காலங்களில் இனப்பதற்றத்தைப் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன. (உ)

## படையினருக்கு காணிகள்

யாழ்ப்பாணம், செப். 18

வடக்கு கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் அங்கவீனமடைந்த 27 படையினருக்கு களுத்துறை கொப்பிராவத்தை பகுதியில் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவச் சிப்பாய்கள் 25 பேர், கடற்படைச் சிப்பாய் ஒருவர் மற்றும் பொலீஸார் ஒருவர் ஆகியோரே காணிகளைப் பெற்றுள்ளனர்.

வழங்கப்பட்ட காணிகளில் வீடுகளைக் கட்டுவதற்காக அரசு 25 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-5)

---

**இன விடுதலை வேண்டின் வன நடுதலை செய்வோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கு ஜெனரேற்றர் எடுத்து வர அனுமதி இல்லை

யாழ். பல்கலைக்கழகத்துக்கு ஜெனரேற்றர்கள், நிழற்பிரதி செய்யும் இயந்திரம் (போட்டோகொப்பி மெஷின்) ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு அனுமதி மறுத்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கட்டுப்பாடுத் தலைமையகம் செயற்பட்ட காலத்தில், யாழ் பல்கலைக்கழகத் தேவைக்கு ஜெனரேற்றர்கள், நிழல் பிரதி செய்யும் இயந்திரம் மற்றும் அதுனைய உபகரணங்கள் எடுத்து வர அனுமதி வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு செயற்படத் தொடங்கியதன் பின்னர் இத்தகைய பொருட்களை கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள நிழல்பிரதி செய்யும் இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை எடுத்துவரவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ 3)

4 புக்காரா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் நுட்பக் கோளாறு காரணமாக மகாலி ஓடு தளத்தில் பழுதடைந்த மூன்று விமானங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

விமானங்களின் சில்லுகளும் அவற்றின் முக்கிய இயந்திரப் பகுதிகளிலும் பழுது ஏற்பட்டுள்ளது.

இவை பழுதடைவதற்கு ஓடுதளத்தின் படுமோசமான நிலையே காரணமாகும் என்று விமானப் படைத்தளபதி ஏயர் சீப் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

"புக்காரா" வகை விமானங்கள் இராணுவத் தாக்குதல் பாவனைக்கு உகந்தவை அல்ல என்று பலத்த விமர்சனத்துக்கு மத்தியிலும், அவற்றை ஸ்ரீலங்கா அரசு கடந்த ஆண்டு கொள்வனவு செய்தது என்பது தெரிந்ததே. (உ-எ)

# டிரக் விபத்தில் சிப்பாய் பலி மூவர் காயம்

கடந்த செவ்வாய்க் கிழமை கொத்மலை, நுவெலெல முகாம் இராணுவத்தினர் டிரக்வண்டியில் கம்பளைநோக்கிச்சென்று கொண்டிருந்தவேளை அது தடம் புரண்டதால் அதில் பிரயாணம் செய்த இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் மூன்று இராணுவச் சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். (ஓ-3)

கடற்படை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் — மூன்று

★ மோட்டார் பீரங்கிப் படகுகள் — ஒன்பது

★ தரையிறக்கும் கப்பல்கள் — நான்கு

★ அதிவேக ரோந்துப் படகுகள் — பதினைந்து

★ நீருந்து விசைப்படகுகள் உட்பட கரையோர ரோந்துப் படகுகள் — இருபத்தெட்டு.

— இத்தகவல்களை "விடுதலைப் புலிகள்" இதழ் வெளியிட்டுள்ளது. (உ)

பேச்சுக்கான ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையான அரசியல் நிலைப்பாடும் அதற்கே உரித்தான அணுகு முறைகளும் இப்போது தெளிவாகியுள்ளன.

"இலங்கைத்தீவில் இனப் பிரச்சினை என்ற ஒன்றில்லை; பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு." என்ற அரசுத் தலைவரின் பிரகடனம் உரிமை கேட்டுப் போராடும் தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு விடப்பட்ட உத்தரவே; இந்த உத்தரவு இப்போது இராணுவ நடவடிக்கைகள் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இதுவரை காலமும் முப்படைத் தளபதிகளையும், பொலிஸ் மா அதிபரையும் கொண்டு விளங்கிய படைத்துறையின் உயர்பீடம் இப்போது எஸ். ரி. எவ். என்ற விசேட அதிரப் படையின் தலைவரையும், என். ஐ. பி என்ற தேசியப் புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநரையும் தன்னுள் உள்வாங்கியுள்ளது.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத்தில் படைப்பொறுப்பை எஸ் ரி.எவ். இன் கையில் கொடுத்துவிட்டு, அங்கிருந்த இராணுவத்தை எடுத்து வடதமிழீழத்தில்—குறிப்பாக யாழ். குடாநாட்டின் மீதான ஒரு தொடர்ச்சியான பெரும் போருக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஒன்றுபடுத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்ட இந்தப் படைத்துறை உயர்பீடமே இப்போது தமிழின அழிப்பை முன்னின்று நடத்திக் கொண்டிருக்கிறது.

அதேவேளை — ஆனையிறவில் இருந்து ஊரலி வரை நடத்தப்பட்ட படையெடுப்பைப் போன்று பல தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இக்கட்டளைப் பீடம் ஆயத்தங்களைச் செய்து வருகின்றது.

ஊரலியிலிருந்து இராணுவம் பின்வாங்கியதற்காக இக்கள தேசம் விஜேதுங்காவையும், படைத்துறையையும் கடிந்து கொள்கிறது. இது விஜேதுங்காவின் அரசியல் வாழ்வைப் பாதிக்கலாம் என்பதால் குடாநாடு மீதான அடுத்த படையெடுப்பை மிகவிரைவில் நடத்த அவர் முயல்வார்.

ஆகவே குடாநாட்டை சூழ குவிக்கப்பட்ட மேலதிகமான 20 ஆயிரம் படையினரும் எந்த நேரத்திலும் — எந்த முனையூடாகவும் ஒரு பெரும் படையெடுப்பை தொடங்கலாம்.

இப்படையெடுப்பை முறியடிக்க புலிகளின் சேனையில் இணையுமாறு தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் இயக்கம் அழைத்துள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

சி.ஐ.டி. அதிகாரிகள் போல் நடித்து

# தமிழ்ப் பயணிகளை பயமுறுத்திய இளைஞன்

## வவுனியா நகரில் சம்பவம்

வவுனியாவில் சுற்றுலாத்த இந்து இளைஞர் மன்றத்தில் தங்கியிருந்த தமிழ்ப் பயணிகளிடம் புலனாய்வுத்துறை அதிகாரி (சி.ஐ.டி.) போல நடித்த இளைஞர் ஒருவர் பணம் பறிக்கும் நோக்குடன் வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இரவு வேளையில் பயணிகள் பலர் தனித்தனியாக சோதனை செய்யப்பட்டனர். மற்றும் சிலர் தாக்கப்பட்டு முழங்காலில் நிறுத்தப்பட்டனர்.

இதனை அடுத்து அந்த இளைஞன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப இளைஞன் வவுனியாவில் உள்ள தேசவிரோதக் கும்பல் ஒன்றை சேர்ந்தவராக இருக்கலாம் என பயணிகள் தெரிவித்தனர்.

# மீனவர்களைத் துரத்தி சுட்ட கடற்படையினர்

## அராலிக் கடலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 18

அராலி — மூளாய் கடற்பிராந்தியத்தில் இரவு நேரத்தில் தொழில் செய்த மீனவர்களைக் கடற்படையினர் துரத்தித் துரத்தி சுட்டனர்.

கடற்படையினரைக் கண்டு படகில் இருந்து குதித்து கடலில் நீந்தியபோது கடற்படையினர் வெளிச்சம் பாய்ச்சிப் பார்த்து மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

எனினும் இச் சம்பவத்தில் அகப்பட்ட மூன்று மீனவர்கள் சாதுரியமாகத் தப்பி வந்தனர்.

ஆனைக்கோட்டை சாவற்காட்டைச் சேர்ந்த தெய்வேந்திரம் பாலராசா (27 வயது), நல்லதம்பி கனகதுரை (35 வயது), குமாரு வீரசிங்கம் (33 வயது) ஆகிய மூவரும் அராலி—மூளாய் கடற்பிராந்தியத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொழில் செய்த போதே கடற்படையினரிடம் "அகப்பட்டுக்" கொண்டனர்.

அவர்களில் ஒருவர் சம்பவத்தைப் பின்வருமாறு விவரித்தார்:-

ஏனையோருடன் தொழிலுக்குச் சென்ற நாம் அவர்களை விட்டுச் சற்றுத் தொலைவு சென்றோம். அங்கு வலைகளைவிரித்துவிட்டுபடகுகளில் ஏறியிருந்த வேளை யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

எங்கள் படகுகளை தமக்கு அருகே கொண்டு வருமாறு அவர்கள் சத்தம் போட்டனர். நாம் வேலணைக் கரைக்குச் சமீபமாகப் போய்விட்டோம் என்பதை அப்போது உணர்ந்தோம். உடனடியாக அராலிக் கரை நோக்கி செல்ல எமது படகுகளைத் திருப்பினோம்.

ஆனால் அக்கரையிலிருந்து சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படகுகளை விட்டு கடலில் குதித்தோம். நீந்தத் தொடங்கினோம். ஆனால் கடற்படையினர் எங்களை நோக்கி வெளிச்சம் பாய்ச்சிக் கொண்டே சுட்டனர்.

நாம் நீந்துவதும் கடலின் அடிக்குள் சுழியோடுவதுமாக மாறி மாறி நீந்தி ஒருவாறு தப்பி வந்து அராலிக் கரையை அடைந்தோம்.

எமது வலைகள், படகுகளை அப்படியே விட்டுவிட்டே வந்தோம். சனிக்கிழமை இரவு சென்று பார்த்த போது அவை அங்கிருக்கவில்லை. என்றார் (அ-15)

# இ. காங்கிரஸுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைப் புதுப்பிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி ஒப்புக் கொண்டுள்ளார்.

தமிழக காங்கிரஸ், ஜெயலலிதா இல்லாத அ.தி.மு.க வையே ஏற்கும் என்று அவர் கூறியிருக்கிறார்.

உறவுகளைப் புதுப்பிக்கும் முயற்சியைத் தொடங்கியது அ.தி.மு.க. தான்; காங்கிரஸ் அல்ல என்றும் அவர் கூறுகிறார்.

தமிழ்நாடு காங்கிரஸைப் பொறுத்த வரையில் தி.மு.கவோ அல்லது அ.தி.மு.கவோ அல்லாத மூன்றாவது அணியுடன் கூட்டுவைப்பதையே விரும்புவதாகவும் அவர் சொன்னார்.

இதனிடையே —

இதுவரை காங்கிரஸைக் கடுமையாகத் தாக்கிப் பேசி வந்த மாநில அமைச்சர்களை இனிமேல் நிதானமாகப் பேசும்படி ஜெயலலிதா கேட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் —

ஜெயலலிதாவையும் அவரது ஆட்சியையும் குறைகூறுவதை காங்கிரஸ் நிறுத்தி வைத்துள்ளது.

அ.தி.மு.க. அரசு மீது நிலக்கரி ஊழல் குற்றச்சாட்டை சென்றவாரம் வரை கடுமையாகச் சுமத்திவந்த காங்கிரஸ் தலைவர்கள் அக்குற்றச்சாட்டு குறித்து இப்பொழுது மௌனமாக இருந்து வருகின்றார்கள்.

பாரதீய ஜனதாக்கட்சி அண்மையில் வெற்றி பெற்று வரும் இத்தருணத்தில் தெற்கில் நாடாளுமன்றத் தொகுதிகள் காங்கிரஸுக்கு முக்கியமாகின்றன.

வேறு கட்சியின் துணை இன்றி காங்கிரஸ் வெற்றி பெற்றிருக்கவேண்டிய ஒரே தொகுதி பழனியாகும். அங்கு கடந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் மூன்றாம் இடத்தையே பிடித்தது.

தி.மு.க. அல்லது அ.தி.மு.கவுடன் காங்கிரஸ் உறவு வைத்திருக்க வேண்டிய அவசியத்தை பழனி உணர்த்தியுள்ளது.

எனவே இதனைப் பயன்படுத்தி, உறவைப் புதுப்பிக்க ஜெயலலிதா கடுமையாகப் பேரம் பேசக்கூடும்.

அதாவது —

★ காங்கிரஸ் தலைமைப் பதவியில் இருந்து வாழப்பாடி இராமமூர்த்தியை நீக்கவேண்டும். —

★ தமிழக ஆளுநர் சென்னாரெட்டியை மாற்ற வேண்டும். —

— போன்ற கோரிக்கைகளை இருகட்சி உறவைப் புதுப்பிக்க நிபந்தனைகளாக ஜெயலலிதா விதிக்கக்கூடும்.

ஆனால் —

இவை இரண்டுமே பிரதமர் நரசிம்மராவால் ஏற்கமுடியாதவையாகும்.

— இப்படி பி. பி. ஸி. தெரிவித்தது.

இதேவேளை —

அ. தி. மு. க வின் 22 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நேற்று நடந்த கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா உரையாற்றினார்.

தமிழ் நாட்டில் எந்தக் கட்சியும் தனது ஆட்சியை விழுத்தவோ, தேர்தலில் தோற்கடிக்கவோ முடியாது என்று அவர் அப்போது குறிப்பிட்டார்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை சோமசுந்தரம்

காரைநகர் கரப்பிட்டியந்தனை களபூமியைச் சேர்ந்த செல்லத்துரை சோமசுந்தரம் காலமாகிவிட்டார். இவர் திருஞானசம்பந்தன், முத்துராசா (U K.) நிர்மலாதேவி, விஜயரத்தினம் (சவுதி), பத்மினிதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனும், ரோகிணி, மகேந்திரராசா, பத்மாதேவி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-10-93) திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் இல. 81, நச்சா வீதி, சுண்டிக்குழி இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.

81, நச்சா வீதி,
சுண்டிக்குழி (27703)

## வெற்றிவேலு மகாலிங்கம்

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமாகிய வெற்றிவேலு மகாலிங்கம் அவர்கள் 1993 - 10 -06இல் கனடாவில் காலமானார் என்பதை அறியத்தருகிறோம். அன்னார் ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், சியாமளா, மகேசன், மனோகரன், மகாதேவன், மஞ்சுளா, மனோரஞ்சன், பாஸ்கரன், மதிவண்ணன் ஆகியோரின் அருமைத் தந்தையும், தம்பிராசா, விக்னேஸ்வரராசா, குமுதினி, திருமலர், பவானி, ஸ்ரீவித்தியா, சோபனா ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், காலஞ்சென்ற இணுவில் சிவபாதம், திருமதி பூபதி ராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனருமாவார். இத்தகவலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. ந. முத்துத்தம்பி
(மைத்துனர்)
(கிருஷ்ணபவான்)

"பிரசா இல்லம்",
காளிகோவிலடி,
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு. (27704)

## திருமதி முருகேசு தெய்வானைப்பிள்ளை

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 249 A நாவலர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி முருகேசு தெய்வானைப்பிள்ளை 17 - 10 - 993 அன்று இறைபதம் எய்திவிட்டார்.

இவர் முருகேசு (முகமது அலி - அப்துல் அலி லொறி முகாமையாளர்)வின் அருமைத் துணைவியாரும், திருமதி தங்கரெத்தினம், ஜெகரெட்ணம் (ஜேர்மனி), திருமதி மங்கையர்க்கரசி குணரெட்ணம் (பொறியியலாளர் - டுபாய்) காலஞ்சென்றவர்களான விஜயரெட்ணம் (வீ. வீ), சண்முகரெட்ணம் (தயா - சபமான மோட்டேர்ஸ்), பஞ்சரெட்ணம் (பாபு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி அன்னலட்சுமி, திருமதி நாகம்மா, V. S கந்தையா, சீனிவாசகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. முருகேசு
(கணவன்)

249 A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (27705)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, இல. ... இல்லத்திலுள்ள அச்சகத்தில் 18-10-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org